நிலைத்த சிறுவீத மீன் பிடிக்கான தன்னார்வ வழிகாட்டுதல்களை (the Voluntary Guidelines for Securing Sustainable Small-Scale Fisheries in the Context of Food Security and Poverty Eradication - the SSF Guidelines) உயர்த்தி பிடித்தபடியும் சந்தித்தோம்;

பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு என்ற கோட்பாட்டையும், அதுபோல, சிறுவீத மீன் தொழிலாளர்கள் மற்றும் ஆதரவு அமைப்புகளுடன் கூட்டுச் செயல்பாடு, அத்துடன, சிறுவீத மீன்பிடி சமூகங்களின் நலன்களுக்கான நிலம் அல்லது நீர்நிலைகளைப் பாதிக்கும் அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகள் பற்றிய கலந்தாலோசனையும் பங்கேற்பும் என்பனவற்றை உயர்த்திப் பிடித்து ;

கடல்சார் மற்றும் உள்நாட்டு சிறுவீத மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்களின் அறிவையும் திறனையும் கொண்டாடிக்கொண்டு ;

உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, கலாச்சார பாரம்பரியம் என்ற பின்புலத்தில் சிறுவீத மீன்பிடியின் தொடர்ச்சியான பொருத்தப்பாட்டை அறிவார்ந்த முறையில் உணர்ந்துகொண்டு;

சிறுவீத மீன்பிடி தொழிலில், அனைவரையும் உள்ளடக்கும் வளர்ச்சியில் பெண்கள் ஆற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை அறிந்து வைத்துக்கொண்டு ;

வாழ்வதற்கும், மீன் பிடி சாதனங்களை இயக்குவதற்கும், மீனைக் கருவாடு ஆக்குதல் உள்ளிட்டு மீனைப் பதப்படுத்தவும், விற்பனை செய்யவும் (குறிப்பாக பெண் விற்பனையாளர்கள்) தேவையான நீர் நிலைகள், நிலங்களை பாரம்பரிய/ வழக்கத்தின் இருக்கும் உரிமையை மண்ணின் மைந்தர்கள் / சிறுவீத மீனவர்கள் இழப்பது பற்றிய கவலையுடையவர்களாக இருக்கிறோம். பின்வரும் காரணங்களால் இதுபோன்ற இழப்புகள் ஏற்படுகின்றன: சுற்றுலா தொடர்பான வேலைகளுக்காக (நீர்நிலைகளை) பேணுதல்/ மூடுதல்; சிறப்பு பொருளாதார மண்டலங்கள்; நில வணித் திட்டங்கள்; நீர்வழிப் பாதைகளை உருவாக்குதல்; கடற்கரை இறால் வளர்ப்பு; காற்று மின் சக்தி மற்றும் மின்னுற்பத்தி திட்டங்கள்; துறைமுகம் உள்ளிட்ட அடிக்கட்டுமான திட்டங்கள்; மீனவர்களை வலுக்கட்டாயமாக

மறுகுடியமர்த்துதல்; மீன் பண்ணைகள் போன்றவற்றில் மீனவர்களைக் கூலியாட்கள் அல்லது ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆக்கி வறியவர்கள் ஆக்குவது மற்றும் பிற வகையிலான ஓரம்கட்டி ஒழிக்கும் நடவடிக்கைகள்;

மேலும், கடல் மட்டம் உயர்வு, பருவநிலை மாற்றம், அதி தீவிர வானிலை நிகழ்வுகள், பெருந்தொற்றுகள் ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்கள் குறித்துக் கவலைகொண்டு;

வாழும் நீர் வள ஆதாரங்கள், பெருங்கடல் சார் , கடற்கரை மற்றும் நில உயிர்ச்சூழலை பேணுவதும், நிலைத்தவகையில் பயன்படுத்துவதும் அனைத்துவிதமான குத்தகை உரிமைகளை அனுபவிப்பதற்கு எந்த அளவு முக்கியத்துவம் உரியது என்பது பற்றிய உள்ளார்ந்த புரிதலுடன்; மேலும், வள ஆதாரங்களையும் சந்தையையும் ஆண்கள்-பெண்கள் அணுகுவதற்கு குத்தகை உரிமைகள் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை முக்கியமானது என்ற புரிதலுடன் (SDG 14b);

ஆசியப் பிராந்தியம் முழுமையிலும் பெண்கள் பல்வகைப்பட்ட சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறோம்; வெவ்வேறு தேசிய சூழல்களிலிருந்து இப்பிரச்சனைகள் எழுகின்றன என்றாலும், பல பொதுவான சவால்கள் இருக்கின்றன என்பதை இனம் காண்கிறோம். பெண்கள் நான்கு பக்கங்களைக்கொண்ட பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள். - இல்லத்தில் உள்ள பிரச்சனைகளை நிறைவேற்றுதல் (குடும்பத்தினரையும் பிள்ளைகளையும் பராமரித்தல்); மீன்பிடி தொழிலின் மதிப்புக் கூட்டு சங்கிலியில் உள்ள வேலைகளில் ஈடுபடுதல்; சமூக அமைப்புகளிலும், அணி திரட்டலிலும் ஈடுபடுதல்; பாரபட்சமான நடவடிக்கைகளை எதிர்கொள்ளுதல்; மேலும்,

கோவிட் 19, அதனைத் தொடர்ந்த லாக்டவுனும் பொருளாதார நெருக்கடியும் மீனவ சமூகத்தின் மீது எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் கருத்தில் கொண்டு அத்துடன் சமூக வளர்ச்சியை மேம்படுத்த வேண்டியதின் தேவையையும், மீன்பிடி மதிப்புக் கூட்டு சங்கிலியில் உள்ள அனைவருக்கும் பலன் தரும் வகையிலான சமூக பாதுகாப்பையும் அளிக்க வேண்டும் என்பதை மனதில்கொண்டு;

பின்வருவனவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று அனைத்து ஆசிய அரசுகளையும், தனியார்களையும், சிவில் சொசைட்டி அமைப்புகளையும், சர்வதேச சமூகத்தையும் வேண்டுகிறோம்:

நாடுகளை கடந்து செல்லும் நதிகளின் நீரோட்டத்தின் மேல்பகுதியில் அணைகள் கட்டுவதன் காரணமாக, நீரோட்டத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள சிறுவீத மீன்பிடி மீனவர்களுக்கு மீன் அற்றுப்போய் கிடைக்காமல் போகும் அபாயத்தைத் தீர்த்து வைக்க வேண்டும்; இதுபோன்ற நிகழ்வுகளில், உயிர்ச்சூழல் சீர்குலைவினால் ஏற்படும் சேதத்தை ஈடுகட்ட சிறுவீத மீன்பிடியில் உள்ள மீனவர்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கப்பட வேண்டும் ;

நன்னீர் ஆதாரங்களைப் பயன்படுத்தும் பலரின் தேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு சிறுவீத மீன்பிடியில் உள்ள மீனவர்களும், பிற மீன் தொழிலாளர்களும் வாழ்வாதாரத்துக்கான தங்களின் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சரிநிகரான வகையிலும், போதுமான அளவிலும் நீரை ஒதுக்கீடு செய்ய வேண்டும்;

நிலம் மற்றும் நீரின் மீதான குத்தகை உரிமைகளை ஒதுக்கீடு செய்யுங்கள், அவை பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துங்கள், மேலும், குறிப்பாக, உள்நாட்டு நீர்நிலைகளிலும், கடற்கரை மீன்பிடி களங்களிலும் கூட்டு நிர்வாகம் (Co- management) மற்றும் சமூக அடிப்படையிலான நிர்வாகத்தை (Community based Management) அங்கீகரித்துள்ள சூழலில், இந்த உரிமைகளை எந்த தடையுமில்லாமல் அனுபவிப்பதற்கு, பெண்கள் உள்ளிட்ட உள்ளூர் சமூகத்தின் திறனை வலுப்படுத்துங்கள்;

குத்தகை உரிமைகளைப் பாதுகாக்கவும், இவை மறுக்கப்பட்டால் அவற்றை மீட்டெடுக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இழப்பீடு அளிக்கவும் செய்யுங்கள், இந்த உரிமைகளை நீக்க வேண்டும் என்றால் பொருத்தமான கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும் ;

மீனவ சமூகத்துடன் கலந்தாலோசனை செய்து குத்தகை உரிமைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்படுத்திடுங்கள்; இந்த சூழலில்,

நிலம் மற்றும் (கடல்சார், உள்நாட்டு) நீர்நிலை தொடர்பான பாதுகாப்பை மேம்படுத்துவதற்கென்று நிதிநிலை ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவதை அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்;

பெண்களின் பிரச்சனைகள் கேட்கப்படுவது, அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை அவர்கள் தாண்டி வரும்வகையில் வளர்ச்சி திட்டங்களுக்கு அவர்கள் பங்களிப்பது என்ற இரண்டும் நிகழும் வகையில், மீன்வள ஆளுகையிலும் கூட்டு நிர்வாகத்திலும் அவர்கள் பங்கெடுக்கும் வகையில் பெண்களுக்கான வெளியை அளித்திடுங்கள் ;

மீன்பிடி துறைக்குப் பெண்கள் அளிக்கும் தீர்மானகரமான பங்கெடுப்புக்காக பெண்களின் உழைப்பை அங்கீகரியுங்கள்; பெண்களின் உழைப்பு கண்ணுக்கு தென்படுவதில்லை. பொருளாதார பிரதி பலன்கள் எதுவும் இல்லாத குடும்ப உழைப்பு என்று கருதப்படுகிறது. இருந்தாலும், பெண்களின் வீட்டு வேலைகள், பேணுதல், மீன்பிடிக்கு முந்தைய மற்றும் பிந்தைய வேலைகள் மீன்பிடி துறையின் செயல்பாட்டின் மையமான அம்சமாக இருக்கின்றன;

பெண்கள் பொதுவான பிரச்சனைகளை விவாதிக்க வாய்ப்பளிக்கும், ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிகளை வளர்த்தெடுக்கும் வலைப்பின்னல் அமைப்பை உருவாக்குவதற்கான அமைப்புகளையும் வெளியையும் உருவாக்க ஆதரவாக இருங்கள்;

கழிவுகளை பெருங்கடலுக்குள் அல்லது உள்நாட்டு நீர்நிலைகளுக்குள் வெளியேற்றுவதற்கு முன்பு தொழிற்சாலை, அதுபோல, நீருயிர் வளர்ப்பு மற்றும் குடிமை கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்திடுங்கள்;

கடற்கரை பகுதிகளில் ஏற்பட்டுள்ள தொழிற்சாலை மாசுபாட்டின் தாக்கத்தினால் ஏற்படும் நோய்களுக்கான சிகிச்சை உள்ளிட்டு, உடல் நலம் பேணுதல், மருத்துவ வசதிகள் மேம்பட்ட வகையில் கிட்டுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்;

சரிநிகர் நிலை மீதும் நீர்வள ஆதாரங்களையும், பல்லுயிர்ச்சூழலையும் பாதகமான முறையில் பாதிக்கும் அழிவுகர மீன்பிடி சாதனங்களையும்

செயல்பாடுகளையும் தடுப்பதற்கும், கட்டம் கட்டமாக முடிவுக்குக்கொண்டுவருவதற்குமான சட்ட முறைகளை வளர்த்தெடுத்து நிறுவனமயப்படுத்துங்கள். அருகாமை கடலிலும், தீவுகளின் கடலிலும் உள்நாட்டுக் கடலிலும், தனியுரிமை பொருளாதார மண்டலங்களிலும் கடல் அடி இழுவை வலைகளை பயன்படுத்துவதை, உரிய கால அவகாசம் கொடுத்து, கட்டம் கட்டமாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் ;

அழிவுகரமான மீன்பிடியைப் பயன்படுத்தாத சிறுவீத மீன்பிடிக்கு, சிரமங்களை குறைப்பதற்கான கட்டுப்படியாகும் விலைக்கு எரிபொருள் கொடுப்பது உள்ளிட்ட முறைகளைப் பயன்படுத்தி சிறுவீத மீன்பிடியாளர்கள் நிலைத்த வகையில் மீன்வள ஆதாரங்களை அணுகுவதனை மேம்படுத்துங்கள்;

(மீன் பாடு)பருவமற்ற காலங்களில் சிறுவீத மீனவர்களுக்கும் மீன் தொழிலாளர்களுக்கும் மாற்று வாழ்வாதார வாய்ப்புகள் அளிப்பதைப் பரிசீலனை செய்யுங்கள்;

செய்ய வேண்டும் என்ற நோக்கமில்லாமல், பிற அரசுகளின் நீர்ப்பகுதிக்குள் நுழைந்துவிட்ட சிறுவீத மீனவர்களை மனிதத்துடன் நடத்தும் முறையை மேம்படுத்துங்கள், அவர்களை கைது செய்வதற்கும், தடுப்பு காவலில் வைப்பதற்கும் ஊக்கம் கொடுக்காதீர்கள்; மீன்பிடி படகுகள் கடலெல்லை தாண்டி பயணப்படும்போது ஏற்படும் பிரச்சனைகளைக் கையாளுவதற்கு அரசுகளுக்கிடையிலான பொறியமைவு ஒன்றை ஏற்படுத்துங்கள்;

படகு, வலை உள்ளிட்ட சாதனங்கள், உயிர், இயற்கை சீற்றம், பெருந்தொற்றுக்கான காப்பீட்டை, அரசு மானியத்தோடு அனைத்து மீனவர்களுக்கும் அளியுங்கள். மீனவ கூட்டுறவு / சங்கம் போன்றவற்றில் உறுப்பினர்களாக இருக்கிறார்களா இல்லையா என்பதைத் தொடர்புப்படுத்தாமல் மீன்பிடி முடக்கக் காலத்துக்கான இழப்பீட்டை/ திட்டங்களை அனைத்து மீனவர்களுக்கும் அளியுங்கள். விபத்துகள், நோய், அல்லது மரணம், அல்லது மீன் பிடிப்பதற்கான சாதனங்கள் அல்லது வாய்ப்புகள் நிரந்தரமாகவோ அல்லது பகுதியளவே இழப்புக்கு ஆளாகும்போது (மீனவ கூட்டுறவு/ சங்கங்கள்) திட்டங்கள் வழியாக உரியக் காலத்தில் பலன்களை அளியுங்கள்;

புயல், சூறாவளிகள், கடல் எழுச்சி சம்பவங்கள் அதிகரித்து வரும் பின்னணியில், கடல்சார் பாதுகாப்பு அமைப்புகள் பேரழிவு பாதுகாப்பு, பெருங்கடலிலிருந்து மீட்பு நடவடிக்கைகளுக்கு தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யுங்கள் ;

புலம்பெயர் மீனவர்கள், மீன் தொழிலாளர்கள் பற்றிய தரவுத் தொகுப்பை உருவாக்குங்கள். அவர்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சங்களான கூட்டுறவுகளிலும், தொழிற்சங்கத்திலும் உறுப்பினர் தகுதி மறுப்பு, சமூக பாதுகாப்பு திட்டங்கள் மறுப்பு உள்ளிட்ட அனைத்தையும் நீக்குங்கள்;

மீன்பிடி துறை அல்லாதவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பெறுகின்ற அனைத்துப் பலன்களையும் மீனவர்களுக்கும், மீன் தொழிலாளர்களுக்கும் அளியுங்கள். இந்த பிரச்சனையில், சமூக நல்வாழ்வு திட்டங்கள் குறித்தும் சிறுவீத மீனவ சமூகத்துக்கு அவை அளிக்கும் பலன்கள் குறித்தும் பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள் ;

சமூகத்தின் பிற குடிமக்கள் தேசிய அளவில் கல்வி கிடைக்கும் வாய்ப்புகளை பெறும் மட்டத்தின் அளவுக்கு, மீனவ சமூகத்தின் ஆண்களும், பெண்களும், சிறார்களும் பெறுவதை உறுதி செய்யுங்கள்;

சமூக மட்டங்களில் பெண்களின் திறன் கட்டமைக்கப்படுவது மிகவும் தீர்மானகரமானதாகும். கல்வியை அவர் பெறுகின்ற வாய்ப்பையும், பயிற்சி திட்டங்கள், தொழில்நுட்பம், முன்மாதிரியான பெண் தலைவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஆகியவற்றையும் அதிகப்படுத்துவதை உள்ளடக்கியதாக இது இருக்கிறது;

சிறுவீத மீனவ சமூகத்தின் வாழ்வாதாரம் பற்றியும், மீண்டு எழுவதற்கு அவர்களுக்குள்ள ஆற்றல் பற்றியும் தரவுகளை ஆவணப்படுத்துங்கள், கூடுதல் மீளும் தன்மையை அவர்கள் பெறுவதற்கான ஆதரவை அளிப்பது நோக்கி நகருங்கள்;

துப்புரவு, தொழிற்சாலை கழிவுகள் மற்றும் குடிமை கழிவுகள் நிர்வாகத்தையும் பலன் தரும் வகையிலான மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்காக மிகவும் பரிதாபமாக நிதி வசதி உள்ள உள்ளூர் அரசாங்கங்களின் பட்ஜெட்டுக்கு போதுமான ஆதரவு அளியுங்கள்;

மீனவ சமூகத்துக்கு மின் வினியோகம் கிடைப்பதை மேம்படுத்துங்கள். புதிய தேடுதல் உள்ள மின்சார வினியோக கட்டமைப்பின் மூலம் தொலைதூரத்தில் உள்ள மீனவ கிராமங்களுக்கு மின்சாரம் கிடைப்பதை எளிதாக்குங்கள்;

மீன்பிடிக்கு முன்னும், மீன்பிடிக்கு பின்னும் கடந்து செல்ல வேண்டியிருக்கும் இடங்களில் ( easement zones) பாதுகாப்பு அளியுங்கள். சுற்றுலா விடுதிகளையும் ஹோட்டல்களையும் சுற்றுலா தொழிலினர் கட்டுவதற்காக சிறுவீத மீன்பிடி படகுகள் நிறுத்தப்படும் இடங்கள், கடலில் இறங்கும் இடங்களிலிருந்து அகற்றப்படுவதற்கு எதிராக பாதுகாப்பு கொடுங்கள்;

சிறுவீத மீனவர்கள், மீன் தொழிலாளர்களின் சமூக வளர்ச்சியில் முன்னணி இடத்தை வகிக்கும் படிக்கு உள்ளூர் அரசாங்கங்களின் திறனைக் கட்டமையுங்கள்;

சமூக பாதுகாப்பு கொள்கைகள் திட்டங்களை வடிவமைப்பதிலும், இத்திட்டங்களின் தரத்தைக் கண்காணித்து அதிகார அமைப்புகளுக்குத் தெரிவிப்பதிலும் மீனவர்களுக்கும், மீன் தொழிலாளர்களுக்கும் உள்ள திறனை வலுப்படுத்துங்கள் ;

பலன் பெறுபவர்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், சிறுவீத மீன்பிடியில் அடங்கியவர்கள் யார் என்ற விவரங்கள் தென்படுவதை எளிதாக்கவும், பாலின ரீதியாக விவரங்கள் பிரிக்கப்பட்டதாக மீனவர்கள், மீன் தொழிலாளர்கள், மீன் வளர்ப்பு செய்யும் குடும்பங்கள், மீன் பிடிக்கும் குடும்பங்களின் விவரங்களைப் பதிவு செய்வதை வலுப்படுத்துங்கள் ;

மீன்வள நிர்வாகத்தின் தன்னாட்சியை பாதுகாத்திடுங்கள், தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகார பொறுப்புகளுக்கு வெளியே உள்ள முகமைகளோடு ஒருங்கிணைப்பு செய்துகொள்வதற்கு ஊக்கம் அளியுங்கள் ;

பின்வருவனவற்றை செய்வதன் மூலம் கடல் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் : (I) சிறுவீத மீனவர்களுக்காக ஒதுக்கப்பட்ட மீன்பிடி மண்டலங்களில் பெரிய கப்பல்கள் புகுவதைக் குறைப்பது (ii) சிறுவீத மீனவர்களுக்குக் கடல் பாதுகாப்பு பற்றி பயிற்சி அளிப்பது ; (iii) பருவநிலை மாற்றத்தாலும், அதி தீவிர வானிலை நிகழ்வுகளாலும் கடலில் இருக்கும்போது என்ன நிகழும் என்பது நிச்சயமற்றும், முன் கூட்டியே அறிய முடியாததுமாக ஆகியிருக்கும் சூழலில், படகினை பதிவு செய்யும்போதே, அதில் உயிர் காக்கும் சாதனங்கள் இருப்பதைக் கட்டாயமாக்குதல் ;

பல்வேறு அடுக்குகளிலான அரசாங்கங்கள் நமது கரிசனங்களை நிறைவேற்ற மனித உரிமையின் அடிப்படையில் அணுகுமுறையுடன் கூடிய சிறுவீத மீன்பிடிக்கான வழிகாட்டுதல் (SSF Guidelines) உதவ முடியும் என்றும், எங்களின் பரிந்துரைகளை தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிற்கு எடுத்துச் செல்ல முடியும் என்றும், கைவினை மீனவர்கள் மற்றும் நீருயிர் வளர்ப்பு சர்வதேச ஆண்டான இந்த ஆண்டில் (International Year of Artisanal Fisheries and Aquaculture -IYAFA 2022) நாங்கள் தெரிந்து வைத்திருக்கிறோம்.

SSF வழிகாட்டுதல்களை அமலாக்கம் செய்வதன் மூலம், நீதியை நிலைநாட்ட முடியும், ஆண்களையும் பெண்களையும் நியாயமான முறையில் நடத்த முடியும், சிறுவீத மீன்பிடி சமூகங்களின் குத்தகை உரிமைகளைப் பாதுகாக்க முடியும், நிர்வாக அதிகார முறையைப் பங்கேற்புள்ளதாகவும் பலன் தருவதாகவும் ஆக்க முடியும், அதேசமயம், கடற்கரையிலும், ஆற்று படுகைகளிலும் வாழும் மீனவ சமூகத்திலும் மண்ணின் மைந்தர்கள் மத்தியிலும் உள்ள குழந்தைகள், இளைஞர்கள், ஆண்கள்-பெண்களின் சமூக வளர்ச்சியைச் சாதிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.